தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 15-10-2014
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மைப் பல்கலையில் நேரு யுவகேந்திராவின் இளைஞர்களுக்கான மாநில அளவிலான பயிற்சி முகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நேரு யுவகேந்திரா இந்திய அரசு நடத்தும் கிராம மாணவர்களுக்கான 7 நாட்கள் பத்துணர்ச்சி பயிற்சி முகாம் இன்று 15-10-2014 துவங்கப்பட்டது. இந்த பயிற்சி தொடக்க விழாவில் சுமார் 60க்கும் மேற்பட்ட கிராம இளைஞர்கள் பங்கேற்றனர்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அவர் பேசுகையில் நல்ல ஒரு சமுதாயம் உருவாக இளைஞர்களுக்கு பலவகையான தொழில்நுட்பங்களில் பல துறைகளில் தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அதை அவர்கள் அறிந்துகொண்டு பயன்படுத்திக்கொண்டால் கிராம முன்னேற்றத்தில் ஒரு தீவிரமான எழுச்சி இயக்கமாக உருவாக்கி பொருளாதாரத்ததை மேம்படுத்தலாம் என்று வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இரா. ரபீந்திரன் அவர்கள் தலைமையுரையாற்றும்போது 1960 களில் உருவான உணவு பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பசுமைபுரட்சியைக் கையாண்டு, உணவு பஞ்சத்தை போக்கி, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, தன்னிறைவு பெற்றுள்ள இந்தியாவாக மாறியதற்கு இளைஞர்களின் பங்கு இன்றியமையாததாக இருந்தது என்றும், மேலும் கிராம முன்னேற்றத்தில் இளைஞர்கள் கவனம் செலுத்தி நல்ல தொழில்நுட்பங்களை அறிந்து கொண்டு தீவிர பணியாற்றவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மக்கள் தொடர்பு அலுவலர் முனைவர். ஜெ. வெங்கட் பிரபு அவர்கள் தமது சிறப்புரையில் இந்தியாவின் பொருளாதாரம் அறிவுசார் பொருளாதாரமாக இருந்த நிலை மாறி இன்று தேர்ச்சி சார் பொருளாதாரமாக மாற கிராம இளைஞர்கள் வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்களைக் கற்று கொண்டு தொழில்முனைவோராக மாறி வெற்றி காண வேண்டும் என்று வலியுறுத்தினார்.

விழாவில் ஆர். சதீஷ், மண்டல இயக்குநர் நேரு யுவ கேந்திரா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அவர்கள் முன்னிலை உரையாற்றினார்.

முன்னதாக கோயம்புத்தூர் மாவட்ட நேரு யுவகேந்திரா இளைஞர் ஒருங்கிணைப்பாளர் மற்றும் உதவி இயக்குநர் வி. வேல்முருகன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இறுதியாக முனைவர். கே. மகேந்திரன் திட்ட அலுவலர், தேசிய சேவை திட்டம் அவர்கள் நன்றியுரை வழங்கினார். செல்வி. ஆர். ஷர்மிளா பானு, நேரு யுவகேந்திரா இந்த துவக்க விழா வெற்றிகரமாக நடைபெற உறுதுணையாக இருந்தார்.

மக்கள் தொடர்பு அலுவலர்